13.08.2025

OS No: 4/2018

பி.வா.சா. 2 திரு. சுப்பிரமணியன் த/பெ பெரியசாமி.

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்தில் 1968ல் வருடத்தில் இருந்து வாடகைக்கு இருந்து வருவதாக சொல்வதில் யார் யாரிடம் வடகைக்கு இருந்தார்கள் என்றால் பெரியசாமியாகிய எனது அப்பா அங்கப்ப பிள்ளை என்பவரிடம் வாடகைக்கு இருந்தார். வாடகைக்கு இருந்த இடமானது ஒரு கடை என்றால் சரிதான். வாடகைக்கு இருந்ததாக சொல்வதில் எழுத்து மூலமாக ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி கடையில் வாடைக்கு நான் இருந்து வருகிறேன் என்பதை காட்டிட வாடகை ரசீது ஏதேனும் தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை ஆனால் ரசீது என்னிடம் உள்ளது. தாவா சொத்திற்கான வாடகை யாரிடம் கொடுக்கப்ட்டது என்றால் முதலில் அங்கப்பன் பிள்ளையிடம் கொடுக்கப்பட்டது அவருக்கு பிறகு அவரது மகனான சித்திகணபதியாபிள்ளையிடம் கொடுக்கப்பட்டது. சித்திகணபதியாபிள்ளை இறந்த பிறகு அவரது மகனான வல்லத்தரசு என்பவரிடம் கொடுக்கப்பட்டது. சித்திகணபதியாபிள்ளைக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் 3 பேர் வாரிசு அதில் மூத்தவர் அங்கமுத்து பிள்ளை அதற்கு அடுத்தவர் வல்லத்தரசு அதற்கடுத்து பாண்டியன் ஆகியோர் ஆவார்கள். வல்லத்தரசு என்பவர் சிங்கப்பூரில் குடியுரிமை பெற்றவர் என்றால் வல்லத்தரசு வரவில்லை என்றால் அவரது மகன் அல்லது மேலாளர் வாங்கி செல்வார். மேற்படி வல்லத்தரசு சிங்கப்பூரில் குடியுரிமை பெற்றவர் என்றும் அதனால் தாவா சொத்திற்கான வாடகையை நான் வல்லத்தரசின் அண்ணனான அங்கமுத்து பிள்ளையின் மகனான 1ம் வாதி ஜெயராமன் என்பவரிடம் தான் செலுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. நான் வாடகை செலுத்தியதற்கு ஆதரவாக வாடகை ரசீதை ஜெயராமன் தான் எனக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.08.13 17:58:15 +0530